

# ஏக் ப்ரயாஸ்

ஷௌர்யா கப்ரா

# உள்ளடக்கம்


ஹரிஷ் & கீதா நிதித் திட்டமிடலைக் கற்கிறார்கள்.. 01-07

ஜெய் உடன் முதலீட்டைக் கூட்டுதல்...................... 08-13

போலு வங்கிக்குச் செல்கிறார் .............................. 14-16

விக்ரம் சிங் ராஜாவும்,
மதிப்பில்லாத அவரது பணமும்.............................. 17-22

கோரிக்கு கடன் சொல்லிக் கொடுத்த பாடம்........... 23-29

மோகன் கண்டுபிடித்த முக்கிய விஷயம் ................ 30-34

விடைக் குறிப்பு ................................................... 35-37

# சிறுவனின் லட்சியப் பயணம்!



ஷௌர்யா ஒரு 16 வயதான இளம் சிறுவன், ஆனால் அவன் தனது வயதுக்கு மீறிய முதிர்ச்சியும், உலக அறிவும், வாழ்க்கைக் கண்ணோட்டமும் அவனுக்கு இருக்கிறது. அவன் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் சிறப்பாகச் செய்து முடிப்பான், இது அவனைப் பற்றிய இன்னொரு கோணத்தைக் காட்டுகிறது. ஷௌர்யா கப்ரா, ஒன்றைச் சாதிப்பதற்குக் குறுக்கு வழியைத் தேடும் ஆள் அல்ல. எல்லோரும் தேர்ந்தெடுக்கும் பாதையைத் தேர்வு செய்யும் ஆளும் இல்லை. அவனுக்குத் தங்கமான மனசு, வசதி வாய்ப்பற்றவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்பொதும் அவனுக்கு உண்டு. சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரம் குறித்துத் தெளிவாக அறிந்துள்ள அவன், இத்தனை சிறிய வயதில், இரண்டு அற்புதமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளான். அந்த முயற்சிகளின் மூலம் அதிக வசதி வாய்ப்புகளைப் பெறாதவர்களுக்கு அடிப்படைப் பொருளாதார அறிவை வழங்கி, அவர்களுக்குக் கிடைக்கும் ஆதாரங்களை அதிகபட்சம் பயன்படுத்த உதவி செய்வதுடன், நிதித் தொழில்நுட்பம் குறித்த அவரது பேரார்வத்தை தனது சகாக்களுடனும் பகிர்ந்துகொள்கிறார்.

16 வயதான மற்றவர்களுக்கு மிகவும் பிடித்த சில விஷயங்கள் மீதும் அவர் மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறார். அவற்றில் இரண்டு கூடைப்பந்து மற்றும் பாடுவது. ஆனால் அதுமட்டுமின்றி, வழக்கமான டீன்ஏஜ் வயதினரைப் போல இல்லாமல், தொழில் மற்றும் நிதிசார் உலகின் நுட்பங்களின் மீது இவன் மிகவும் ஆர்வம் உடையவராக இருக்கிறான். இவன் எண்களில் மேதையாகத் திகழ்வது தற்செயலானது இல்லை. அதனால்தான், இன்றைய டீன்ஏஜ் வயதினர் பல சாதனங்களுக்கு அடிமையாக இருக்கும் நிலையில், ஷௌர்யா ஒரு லட்சியத்தை மனதில் வைத்துக்கொண்டு **"சிம்ப்ளிஃபின்-டெக்"** மற்றும் **"ஏக் ப்ரயாஸ்"** என்ற இரண்டு முயற்சிகளைக் கையில் எடுத்துள்ளான்.

இந்த இரண்டின் மூலமும் தனது பொருளாதார அறிவை மற்றவர்களுக்கும் வழங்கியும், இந்தத் துறையிலுள்ள பிற வல்லுனர்களின் அறிவை மற்றவர்களுக்கு வழங்கியும் அவர்களுக்கு நன்மை கிடைக்கச் செய்ய முயற்சி செய்கிறான். **"சிம்ப்ளிஃபின்-டெக்"** என்பது இளம் நபர்களுக்கு நிதித் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி, அது குறித்த அறிவை வழங்கும் ஒரு தளமாகும் இது நிதித் தொழில்நுட்பத்துறை வல்லுனர்களின் விளக்கங்கள் மூலம், இந்தச் சிக்கலான உலகம் குறித்த மர்மத்தைத் தெளிவுபடுத்துகிறது. **"ஏக் ப்ரயாஸ்"** மூலம் இந்தியாவிலுள்ள கிராமப்புற மக்களிடையே பொருளாதார அறிவை அதிகரிக்க வேண்டும் என்பதே ஷௌர்யாவின் குறிக்கோளாகும். பொருளாதார அறிவை வழங்குவதன் மூலம், நிதிசார்ந்த விழிப்புணர்வை அதிகரித்து, கிராமப்புற ஏழைகளுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்பதே இந்தத் தளத்தின் நோக்கமாகும். ஷௌர்யா கப்ரா ஒரு லட்சியவாதி. இப்போதைக்கு ஒரு சிறுவனின் உருவத்திலுள்ள பெரிய மனிதன். ஆனால் அவனது கண்களின் ஒளியும், அவனுடைய உத்வேகமும், எதிர்காலத்தில் என்ன வரப்போகிறது என்பதைக் காட்டுகிறது, அதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை... தனக்கென சொந்தமாக ஒரு நிதித் தொழில்நுட்ப நிறுவனத்தைத் தொடங்கும் திட்டம் அவனிடம் உள்ளது.

# ஹரிஷ் & கீதா பட்ஜெட் போடுவது எப்படி என்று கற்கிறார்கள்



*ஒருநாள் ஹரிஷ் மற்றும் கீதா ஒரு சாகசத்துக்காக அடர்ந்த வனத்துக்குள் போனார்கள். ஆனால், விரைவிலேயே ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டார்கள். அவர்களின் ஜிஞ்சர் பிரெட் வீட்டுக்குப் பாதுகாப்பாகத் திரும்புவதற்காக அவர்கள் உருவாக்கிய பாதையை குறும்புக்கார அணில்கள் துவம்சம் செய்துவிட்டன!*



அவர்களிடம் போதுமான உணவு இல்லாததால் அவர்கள் பதட்டமானார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் 100 லட்டுகள் மட்டுமே மீதி இருந்தன. “கீதா, நம்மிடம் உள்ள லட்டுகளை சரியாகப் பயன்படுத்தவில்லை என்றால் நாம் பட்டினிகிடக்க வேண்டியதுதான்” என்று ஹரிஷ் சொன்னார்.

புத்திசாலியான ஹரிஷ் தனது லட்டுகளை எப்படி உண்ண வேண்டும் என்று திட்டமிடுகிறார். அது மிகவும் எளிமையாக இருந்தது – அது அந்தந்த நாளின் காலநிலையைப் பொறுத்து அமையும். அவர் வரைந்த அட்டவணை இது போன்று இருந்தது!

| நாள் | காலநிலை | லட்டு |
|---|---|---|
| நாள் 1 | இதமான காலநிலை | 10 லட்டுகள் |
| நாள் 2 | கடுமையான காலநிலை | 15 லட்டுகள் |
| நாள் 3 | மிகச்சிறந்த காலநிலை | 5 லட்டுகள் |
| நாள் 4 | கடுமையான காலநிலை | 15 லட்டுகள் |
| நாள் 5 | இதமான காலநிலை | 10 லட்டுகள் |
| நாள் 6 | மிகச்சிறந்த காலநிலை | 5 லட்டுகள் |
| நாள் 7 | இதமான/கடுமையான காலநிலை | 12/13 லட்டுகள் |
| நாள் 8 | கடுமையான காலநிலை | 15 லட்டுகள் |
| நாள் 9 | மிகச்சிறந்த காலநிலை | 5 லட்டுகள் |
| நாள் 10 | இதமான/கடுமையான காலநிலை | 12/13 லட்டுகள் |



*இந்த அட்டவணையின் உதவியுடன், குளிர்காலத்தைக் கடந்து வருவதற்குத் தனக்கு 104 முதல் 106 லட்டுகள் தேவைப்படும் என்று ஹரிஷ் கணக்கிட்டார். ஆனால் அவரிடம் 100 லட்டுகள் மட்டுமே இருந்ததால், ஒரு நாளில் அவர் சாப்பிடும் உணவின் அளவைக் குறைப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.*

*“காலநிலை மோசமாக இருக்கும்போது நாம் பயணம் செய்ய வேண்டாம். அப்படிச் செய்தால் ஆற்றல் வீணாகாது என்பதால் எனக்கு அதிகமாகப் பசிக்காது, அடுத்த நாள் சாப்பிடுவதற்காக லட்டுகளை மிச்சப்படுத்தலாம். ஒருவேளை காலநிலை நன்றாக இருந்தால், நமது ஜிஞ்சர்பிரெட் வீட்டுக்கு நடக்கலாம், நான் கொஞ்சம் லட்டுகளைச் சேர்த்து சாப்பிடுவேன்” என்று கீதாவிடம் ஹரிஷ் சொன்னார். அவரது கணக்கீடு மேலும் துல்லியமாகவும், சரியாகவும் இருப்பதற்காக அவர் மற்றொரு அட்டவணையை உருவாக்கினார்.*



| நாள் | காலநிலை | லட்டு |
|---|---|---|
| நாள் 1 | இதமான காலநிலை | 11 லட்டுகள் |
| நாள் 2 | கடுமையான காலநிலை | 12 லட்டுகள் |
| நாள் 3 | மிகச்சிறந்த காலநிலை | 6 லட்டுகள் |
| நாள் 4 | கடுமையான காலநிலை | 12 லட்டுகள் |
| நாள் 5 | இதமான காலநிலை | 11 லட்டுகள் |
| நாள் 6 | மிகச்சிறந்த காலநிலை | 6 லட்டுகள் |
| நாள் 7 | இதமான/கடுமையான காலநிலை | 11/12 லட்டுகள் |
| நாள் 8 | கடுமையான காலநிலை | 12 லட்டுகள் |
| நாள் 9 | மிகச்சிறந்த காலநிலை | 6 லட்டுகள் |
| நாள் 10 | இதமான/கடுமையான காலநிலை | 11/12 லட்டுகள் |

இந்த அட்டவணையின் உதவியுடன் குளிர்காலத்தைக் கடந்து வருவதற்கு அவருக்கு 98 முதல் 100 லட்டுகள் வரை தேவைப்படும் என்று அவர் கணக்கிட்டார். எனவே, அவர் இந்த அட்டவணையை சரியாகப் பின்பற்றினால், இந்தக் குளிர்காலத்தின் 10 நாட்களைக் கடப்பதற்கு அவருக்கு (100+98)/2=99 லட்டுகள் தேவை. அவரிடம் இருந்தது 100 லட்டுகள். அப்படியென்றால் அவர் ஏதாவது எதிர்பாராத சூழ்நிலைக்கும் திட்டமிட்டுள்ளார்.



கீதா, அதற்கு மாறாக, லட்டுகளை எப்படிச் சாப்பிட வேண்டும் என்பதைச் சரியாகத் திட்டமிடவில்லை. அவர் வேறு ஒரு முறையைப் பின்பற்றியதால் 10வது நாளன்று அவரிடம் உணவு எதுவும் மிச்சம் இருக்கவில்லை. அவர் பின்பற்றிய அட்டவணை காலநிலையோ, அவரது ஜிஞ்சர் பிரெட் வீட்டை அடைவதற்குத் தேவையான நாட்களின் எண்ணிக்கையோ, பயணம் செய்ய அவரிடம் இருந்த லட்டுகளோ கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதனால் கீதா மிகவும் சோகமானார்.


| நாள் | காலநிலை | லட்டு |
|---|---|---|
| நாள் 1 | இதமான காலநிலை | 11 லட்டுகள் |
| நாள் 2 | கடுமையான காலநிலை | 12 லட்டுகள் |
| நாள் 3 | மிகச்சிறந்த காலநிலை | 11 லட்டுகள் |
| நாள் 4 | கடுமையான காலநிலை | 10 லட்டுகள் |
| நாள் 5 | இதமான காலநிலை | 12 லட்டுகள் |
| நாள் 6 | மிகச்சிறந்த காலநிலை | 10 லட்டுகள் |
| நாள் 7 | இதமான/கடுமையான காலநிலை | 13 லட்டுகள் |
| நாள் 8 | கடுமையான காலநிலை | 11 லட்டுகள் |
| நாள் 9 | மிகச்சிறந்த காலநிலை | 10 லட்டுகள் |
| நாள் 10 | இதமான/கடுமையான காலநிலை | மிச்சமுள்ளது 0 லட்டு |



*ஹரிஷ் சரியாகத் திட்டமிட்டதால், அவர் வேண்டிய அளவுக்குச் சாப்பிட்ட பிறகும் அவரிடம் 1 லட்டு மிச்சம் இருந்தது, ஆனால் கீதாவுக்கோ எதுவும் மிச்சமில்லை. அதனால் 10வது நாளன்று அவர் சாப்பிடுவதற்கு உணவு எதுவும் மிச்சமில்லை. சேமிப்பதன் முக்கியமான நோக்கம் என்பது நீங்கள் ஒரு நாளில் சாப்பிடுவதற்கான லட்டுகளின் எண்ணிக்கையை திட்டமிடுவது அல்லது நீங்கள் ஒரு நாளில் செலவு செய்யும் பணத்தைத் திட்டமிட்டு, உங்களிடம் உள்ள மொத்த லட்டுகள் அல்லது பணத்தோடு அதைச் சரிபார்த்துக்கொள்வதாகும்.*

கீதா ஆச்சரியத்துடன் ஹரிஷைப் பார்த்தாள், அவன் கணக்கிட்ட விதம் அவளுக்கு மிகவும் பிடித்துப்போனது. “ஹரிஷ்! நீ எப்படி லட்டுகளை மிச்சப்படுத்தினாய், எனக்கும் அதைச் சொல்லிக்கொடு! இப்போது சீக்கிரம் வீட்டுக்குச் சென்று கட்டிலில் சொகுசாகப் படுத்துத்தூங்க வேண்டும்!” என்று கூறினாள். அவர்கள் கைகளைக் கோர்த்தபடி தங்களின் ஜிஞ்சர் பிரெட் வீட்டுக்குச் சென்றார்கள்.

**கீழுள்ள குறுக்கெழுத்துப் புதிருக்கு விடை தருக**




**இடமிருந்து வலம்**

3. கடைசியில் கீதாவிடம் லட்டுகள் ___________

5. லட்டுகளை உண்பதற்கு ஹரிஷ் தயாரித்தது ___________

**கீழிருந்து மேல்**

1. ஒவ்வொரு நாளும் எத்தனை லட்டு தேவை எத்தனை லட்டு வேண்டுமென்று ஹரிஷிடமிருந்தது ___________

**மேலிருந்து கீழ்**

2. கீதாவிடம் இல்லாதது ___________

# முதலீட்டைக் கூட்டும் மாயாஜாலம்



முன்பொரு காலத்தில், ஜெய் என்ற சிறுவன் ஒரு கிராமத்தில் தன் குடும்பத்தோடு வசித்து வந்தான். அவர்கள் ஏழைகளாக இருந்தார்கள், அவர்களின் தினசரி உணவுக்கே சிரமமாக இருந்தது. அவர்கள் எல்லோருக்கும் போதிய உணவு கிடைக்கவில்லை. அவர்களிடம் இருந்த எல்லாவற்றிலும் அவர்கள் பெருமையாக நினைத்த ஒன்று அவர்களிடம் இருந்த மாடு.



ஒருநாள் ஜெய் மாடு மேய்த்துக் கொண்டிருந்த சமயத்தில், தூரத்தில் ஏதோ ஒரு உருவம் தெரிந்தது. பக்கத்தில் வந்த பிறகுதான் அது ஒரு ஆள் என்பது அவனுக்குத் தெரிந்தது. அந்த நபர் ஒரு பழுப்பு நிறத் தொப்பியை அணிந்திருந்ததுடன், கையில் ஒரு நீளமான குச்சி இருந்தது. அவருடைய ஒரு கை பேண்ட் பாக்கெட்டில் இருந்ததால் அந்தக் கையில் என்ன இருக்கிறது என்பது ஜெய்க்குத் தெரியவில்லை.

"நீங்கள் யார்?"

என்று ஜெய் கேட்டான். அந்த வினோதமான மனிதன் தன்னை ஒரு மந்திரவாதி என்று கூறினார். அந்த மனிதன் தன் பெயரைச் சொல்லாமல், தன்னிடம் ஒரு மாயாஜால பீன்ஸ் இருக்கிறது, அதிலிருந்து முளைக்கும் செடி மிகவும் உயரமாக வளர்ந்து வானத்தையே தொடும் என்று சொன்னார். அதைக் கேட்டு ஜெய்க்கு ஒரே ஆச்சரியம், நான் அந்த பீன்ஸை பார்க்க முடியுமா என்று கேட்டான். அந்த மனிதன் தன் கையைப் பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்து கைகளை விரித்துக் காட்டினார். அதில் 5 மாயாஜால பீன்ஸ்கள் இருந்தன. எப்படியாவது அந்த பீன்ஸ்கள் தனக்கு வேண்டுமென்று ஜெய் நினைத்தான். கொஞ்சம் கூட யோசனை செய்யாமல், அந்த பீன்ஸின் விலை என்ன என்று கேட்டான்.

"இந்த பீன்ஸ் விதைகளுக்குப் பதிலாக எனக்கு உன் மாடு வேண்டும்!" என்று அந்த மந்திரவாதி கேட்டார். ஏனென்றால், அந்தக் குடும்பத்துக்கே அந்த மாடு தான் மிகவும் முக்கியம். ஆனாலும் அவன் அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வில்லை. எனவே மாட்டுக்குப் பதில் பீன்ஸை பண்டமாற்றாகப் பெறுவது என்று முடிவெடுத்தான்.





அவன் வேகமாக வீட்டுக்கு வந்து அந்த பீன்ஸ் விதைகளை முளைக்கப் போட்டான். அவற்றுக்கு நன்றாகத் தண்ணீர் ஊற்றிவிட்டு, ஏதாவது அதிசயம் நடக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு தூங்கச் சென்றான்! அடுத்த நாள் அதிகாலையிலேயே எழுந்து, அந்தச் செடி முளைத்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக வெளியே சென்றான். அவன் கண்ட காட்சியை அவனாலேயே நம்ப முடியவில்லை! முந்தைய நாள் அவன் சந்தித்த அந்த ஆள், உண்மையிலேயே மந்திரவாதி தான்! அவனுக்கு முன்னால் 5 அடி உயரம் வளர்ந்திருந்த மரத்தைப் பார்த்தான், அதில் ஏற்கனவே பல நிறங்களில் பழங்கள் காய்த்திருந்தன.

ஜெய், அந்த மரத்திலிருந்த பழங்கள் எல்லாவற்றையும் பறித்துக்கொண்டு, அவற்றை விற்பதற்காகச் சந்தைக்குச் சென்றான். அவை மிகவும் பெரியதாகவும், அதிகச் சாறுடனும் இருந்தன, அதையெல்லாம் விற்றதால் அவனுக்கு நிறையப் பணம் கிடைத்தது!



பழங்களை விற்பதன் மூலம் அவனுக்குக் கிடைத்த பணம் முழுவதையும் செலவு செய்யாமல் கொஞ்சம் உரமும் வாங்கினான். வீடு திரும்பியதும் மண்ணுக்கு உரம் போட்டான், அது உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை மீண்டும் முதலீடு செய்வதைப் போல் இருந்தது. அடுத்த நாள் விடியும் வரை அவன் மரத்திடம் செல்லவில்லை, காலையில் சென்று பார்த்தபோது பழங்களின் எண்ணிக்கை இருமடங்காக இருந்ததுடன் அவற்றின் அளவும் பெரிதாக இருந்தன. அவன் அந்தப் பழங்களை எல்லாம் மீண்டும் ஒருமுறை பறித்து, அவற்றை விற்றுவிட்டு, செடிகளுக்கு மீண்டும் உரம் வாங்கி வைத்தான். இந்தச் செயலை மீண்டும் தொடர்ந்து செய்தான். அடுத்த நாள் காலையில் சென்று பார்த்தபோது, மரம் 1வது நாள் இருந்ததைவிட 4 மடங்கு பெரிதாகியிருந்தது. அவன் இதே செயலைத் தொடர்ந்தான், அப்போது அதன் அளவு முதலில் 8 மடங்குகள், அதன் பிறகு 16 மடங்கு, அதன் பிறகு 32 மடங்கு பெரிதாக இருந்தது. அதன் அளவு அதிவேகமாக அதிகரித்தது. கடைசியில், அவன் வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து பழங்கள் தரும் அளவுக்கு அந்த மரம் மிகப்பெரிய மரமாக வளர்ந்தது. இந்தக் கதையில் மரத்தின் பழங்கள் தந்த வருமானம் உரங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டு, அந்த முதலீடு மரத்தைப் பெரிதாக்கி மேலும் வருமானம் கொடுத்தது, அதுபோலவே நீங்கள் சம்பாதிக்கும் தொகையை மீண்டும் முதலீடு செய்து, அந்த முதலீடும் உங்களுக்கு வருமானத்தைத் தருவதே முதலீட்டைக் கூட்டுவது என்பதன் அடிப்படை. முதலீட்டைக் கூட்டுவது என்பது மிகவும் பலன்தரும் ஒரு செயல், அது பலமடங்கு பலன் தருவதால்



*(ஒவ்வொரு தடவையும் பழைய நிலைக்குத் திரும்பும்) அந்த முதலீடு இறுதியில் மிகப்பெரிய லாபத்தைத் தரும்.*


*இது நடப்பதற்கான வாய்பே இல்லை என்று சொன்னாலும், நீங்கள் ஆரம்பத்தில் 1000 முதலீடு செய்து ஒவ்வொரு நாளும் 100% லாபம் கிடைப்பதாகக் கணக்கில் கொள்வோம்:*

| நாள் | முதலீடு | லாபம் + முதலீடு |
|---|---|---|
| 1 | 1000 | 2000 |
| 2 | 2000 | 4000 |
| 3 | 4000 | 8000 |
| 4 | 16000 | 32000 |
| 5 | 64000 | 128000 |
| 6 | 256000 | 512000 |

*6வது நாளன்று உங்கள் முதலீடு, அதன் அசல் மதிப்பைவிட 512 மடங்கு அதிகமாக இருக்கும். முதலீட்டைக் கூட்டுவது என்பது நீங்கள் எவ்வளவு தொகை சம்பாதித்தாலும் அதை மீண்டும் முதலீடாக மாற்றுவதாகும், எனவே, உங்கள் முதலீடானது உங்கள் ஆரம்பத் தொகையைவிடப் பல மடங்கு அதிகரித்து, உங்களுக்கு அதிக லாபம் கிடைக்க வழிவகுக்கிறது.*

## கீழுள்ள குறுக்கெழுத்துப் புதிருக்கு விடை தருக

பெயர்:________________________




**மேலிருந்து கீழ்**

1. பீன்ஸ் மரத்தில்__________________காய்த்திருந்தன
3. ஜெய் மாட்டைக் கொடுத்துவிட்டு பீன்ஸ் வாங்கியது_____________முறை
5. ஜெய் தனது லாபத்தை________________செய்தான்

**இடமிருந்து வலம்**

2. முதலீடுகள் உங்களுக்குத் தருவது____________
4. நீங்கள் செய்யும் முதலீடு உங்களுக்குத் தரும் லாபம்____________

# வங்கிச் சேவைகள்



போலு ஒரு காய்கறி வியாபாரி. ஒரு நாளில் அவர் எவ்வளவு தொகை சம்பாதித்தாலும் அதில் பாதியை அவர் நடப்புக் கணக்கில் வைத்திருப்பார். அவருக்குத் தெரிந்ததெல்லாம் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தலாம், தேவையான சமயத்தில் திரும்ப எடுத்துக்கொள்ள முடியும் என்பதே. ஒருநாள் அந்தக் காய்கறி வியாபாரி அங்கு தனது நண்பர் ஹாரியாவைச் சந்தித்தார். நீ எதற்காக இங்கே வந்திருக்கிறாய்? என்று போலு தன் நண்பர் ஹாரியாவைக் கேட்டார்.

ஹாரியா சிறிது பணத்தை முதலீடு செய்வதாகவும், வங்கியிலிருந்து கொஞ்சம் பணத்தைக் கடனாக வாங்கி, அதை வைத்து ஒரு துணிக்கடை தொடங்கப் போவதாகவும் கூறினார். ஆனால் இந்தக் கடனுக்காக அவர் ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் அசல் வட்டி செலுத்த வேண்டும் என்றும், அதற்குப் பெயர் தவணைத் தொகை.




ஹாரியா சொன்னதை போலு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். சென்ற மாதம் அதிக லாபம் கிடைத்ததாக அவர் ஹாரியாவிடம் கூறினார். அந்த லாபத்தை ஏதாவது வழியில் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியுமா? என்று அவர் ஹாரியாவிடம் கேட்டார் நீங்கள் அந்த லாபத்தின் பலனைப் பெற வேண்டும் என்றால் அதைத் தொடர்ந்து முதலீடு செய்யவும், அதன் மூலம் நீங்கள் அதற்கான வட்டியைத் தொடர்ந்து பெறுவீர்கள் என்று ஹாரியா கூறினார். இதற்கு நீங்கள் வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கைத் தொடங்கி, உங்கள் பணத்தை அதில் மீண்டும் முதலீடு செய்துகொண்டே இருக்கவும். வங்கியும் ஒவ்வொரு மாதமும் உங்கள் கணக்கில் குறிப்பிட்ட தொகையைத் தொடர்ந்து வரவு வைக்கும், அதற்கு வட்டி என்று பெயர். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் இதிலிருந்து பணம் எடுக்கலாம். உங்களிடம் அதிகப்படியாகப் பணம் இருந்து, அது உங்களுக்கு உடனடியாகத் தேவைப்படவில்லை என்றால், அதை வங்கியில் வைப்புத் தொகையாகப் போட்டு வைக்கவும், அதற்கு அதிக வட்டி கிடைக்கும்.




இதைக் கேட்டுக் காய்கறி வியாபாரி மிகவும் மகிழ்ச்சியடைந்தார். இவ்வாறு செய்வதால் இருவருக்கும் லாபமே என்பதால் அவருக்கு இந்த முறை மிகவும் பிடித்தது. இம்முறையில் வங்கிக்கும் தொடர்ச்சியாகப் பணம் கிடைக்கிறது, அவர்களும் இதற்காக உங்களுக்கு வட்டி தருகிறார்கள். அங்கே உங்கள் பணம் அதிகம் ஆவதுடன் பாதுகாப்பாகவும் இருக்கிறது.

## பொருத்துக

| | |
|---|---|
| முதலீட்டுத் தொகை | லாபத்தை மறுமுதலீடு செய்தல் |
| மறுமுதலீடு | முதலில் செய்யும் தொகைக்குப் பெயர் |
| வைப்புத் தொகை | ஒன்றில் பணத்தை முதலீடு செய்வது |
| தவணை | வங்கியில் குறிப்பிட்ட காலம் இருக்கும் வைப்புத் தொகைக்குக் கிடைக்கும் லாபம் |
| வட்டி | வங்கியிடமிருந்து பெறப்படும் கடனுக்கு ஒவ்வொரு மாதம் காலாண்டில் திருப்பிச் செலுத்தத் தேவையான தொகை |
| முதலீடு | உங்கள் வங்கிக் கணக்கில் பணம் செலுத்துவது |

# விக்ரம் சிங் ராஜாவும் மதிப்பில்லாத அவரது பணமும்



தூரத்தில் உள்ள ஒரு ராஜ்ஜியத்தில் ஒரு ராஜா இருந்தார், அவர் மிகவும் அன்பானவர், ஆனால் அவர் ஒரு முட்டாள். அவரது பெயர் விக்ரம் சிங் ராஜா. விக்ரம் சிங் ராஜா ஒரு வரம் பெற்றிருந்தார். அவர் எதைத் தொட்டாலும் தங்கமாக மாறியது. இந்த வரத்தைக் கொண்டு அவர் தனக்காக ஒரு தங்க சிம்மாசனம், தங்கத் தேர், தங்க மாளிகையை உருவாக்கிக் கொண்டார். விரைவிலேயே அவர் மனித குல வரலாற்றிலேயே மிகப்பெரும் பணக்காரர் ஆனார். இதன் காரணமாக அருகிலுள்ள அரசர்கள் எல்லாம் அவர் மீது பொறாமைப்பட்டார்கள்.

*ஆயிரக் கணக்கான அரசர்கள் அவரிடம் வந்து பரிசுகள் கொடுத்தார்கள், அவர்கள் அவருக்கு மிகச்சிறந்த பட்டு, பல நூறு ஏக்கர் விளை நிலங்கள், இதற்கு முன் கேள்விப்பட்டிருக்காத மசாலாப் பொருட்கள் என எதைக் கொடுத்தாலும் அதை அந்த ராஜா ஏற்றுக்கொண்டார். விக்ரம் சிங் ராஜா மிகச் சாதாரணமான பொருட்களுக்குப் பதிலாக ஆயிரக்கணக்கான கிலோ எடையுள்ள தங்கத்தை எல்லோருக்கும் கொடுத்தார், ஏன் கொடுக்கக்கூடாது? அவரால் எவ்வளவு தங்கத்தை வேண்டுமானாலும் உருவாக்க முடியுமே!*



*வியாபாரிகள், தங்கத்தின் மதிப்புடன் ஒப்பிடும்போது மிகக்குறைந்த மதிப்புள்ள பரிசுகளைக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் தங்கமாக மாற்றிக்கொண்டு சென்றார்கள். ஆனால், நாட்கள் செல்லச்செல்ல வியாபாரிகள் வருவது குறைந்தது.*



*முன்பெல்லாம் அவரைச் சந்திப்பதற்கு வியாபாரிகளும், பேரரசர்களும் வந்தார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் அவரிடம் வந்து தங்கம் வேண்டுமெனக் கேட்டும் சாதாரணக் குடிமக்களின் எண்ணிக்கையே அதிகம் இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல, அவர்கள் வருவதும் நின்றுவிட்டது. "தங்க வியாபாரத்துக்காக என்னைச் சந்திக்கப் பல மாதங்களாக யாரும் வரவில்லை, எதனால் யாருக்கும் தங்கம் தேவைப்படவில்லை!" என்று விக்ரம் சிங் ராஜா கோபமாகக் கூறினார்.*

*இந்தப் புதிருக்கு விடை தெரிந்துகொள்வதற்காக அவர் மாறுவேடம் போட்டுக்கொண்டு நகரத்தைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பினார். அவர் ஊர் முழுவதும் சுற்றி, பல முக்கியத் தெருக்கள் மற்றும் வீடுகளுக்குச் சென்றபோது அந்த நகரத்தில் ஏற்கனவே இருந்த தங்கத்தைப் பார்த்தபோது அவர் கண்களையே அவரால் நம்பமுடியவில்லை! நகரத்துக்குத் தங்க நகரம் என்று பெயர் வைக்கும் அளவுக்கு எங்கு பார்த்தாலும் ஒரே தங்கம். எங்கே திரும்பினாலும் தங்கமாகவே காட்சியளித்தது. தங்கக் கடைகள், தங்க வீடுகள், தங்க வண்டிகள், தங்கக் கோவில்கள், தங்கத் தெரு விளக்குகள் என எல்லா இடங்களிலும் தங்கம்!*



*மன நிறைவுடன் அவர் தனது ஊருக்குத் திரும்பினார். தனது ராஜ்ஜியத்தில் செல்வச் செழிப்புடன் இருக்கிறது, எல்லோரும் பணக்காரராக இருக்கிறார்கள் என்று அவர் மகிழ்ச்சியடைந்தார். இருந்தாலும், ஏன் யாருமே தங்கம் வேண்டுமென்று வரவில்லை என்று அவரால் கணிக்கவே முடியவில்லை. “என்னால் இதற்கு மேல் பொறுமையாக இருக்கமுடியாது!” என்று விக்ரம் சிங் ராஜா கத்தினார். அவர் தன் நிதியமைச்சரை வரச்சொல்லி ஏன் யாருக்கும் தங்கம் தேவைப்படவில்லை என்று கேட்டார்.*



*“அரசரே, எல்லோரிடமும் போதுமான அளவு தங்கம் இருக்கிறது. மக்களுக்கு சலித்துவிட்டது, வேண்டிய அளவு தங்கம் இருப்பதால் அதை யாரும் பெரிதாக நினைக்கவில்லை. எல்லோரிடமும் இருப்பதால் இனிமேலும் அதற்குச் செலவு செய்வதற்கு யாரும் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அரிதான, விலை மதிப்புமிக்க பட்டு அல்லது சாடின் துணி ஆகியவற்றையே வாங்க விரும்புகிறார்கள். தங்கம் தேவைக்கதிகமான அளவு கிடைக்கிறது.”*

*கடைசியில் தனது நிதியமைச்சர் என்ன சொல்கிறார் என்பதை விக்ரம் சிங் ராஜா புரிந்துகொண்டார். எதையெடுத்தாலும் தங்கமாக மாற்ற வேண்டும் என்ற தனது உந்துதலைக் கட்டுப்படுத்துவேன் என்று உறுதியெடுத்தார். அவர் தன் மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதுடன் தனது ராஜ்ஜியமும் வளமாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். இனி அவர் மக்களின் நலனில் மட்டும் கவனம் செலுத்துவார்.*

*நீதி - தேவைக்கு அதிகமாகக் கிடைக்கும் எந்தப் பொருளும் அதன் மதிப்பை இழந்துவிடும்*

# <u>தங்கத்தின் மதிப்பு</u>

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | ச | வி | லை | ம | தி | ப் | ப | ற் | ற | து | ன | ள | ய |
| ழு | சு | ஊ | ளு | ளு | சு | நு | ஊ | டு | நு | ளு | ஐ | னு | ே |
| கு | ழு | நு | நி | தி | ய | மை | ச் | ச | ர் | வு | நு | சு | கு |
| ஏ | ஊ | லு | ளு | ஊ | சு | ஐ | யு | து | வு | ழு | லு | ளு | ம |
| அ | தி | க | ப் | ப | டி | யா | ன | ச | ளு | யு | ழு | சு | தி |
| டு | சு | சு | ழு | ஆ | ளு | ரு | வு | சு | த | ளு | டு | யு | ப் |
| நு | நு | ஐ | ளு | சு | நு | யு | நு | வு | ங் | சு | பு | ர் | பி |
| ஐ | ளு | ஐ | ஊ | ழு | அ | யு | ஐ | கு | க | ரு | கு | நு | ல் |
| ே | வு | டு | ழு | ழு | ரி | ஐ | சு | டு | ம் | ளு | ே | நு | லா |
| ளு | ஏ | யு | டு | நு | தா | ளு | யு | நு | ஐ | ஐ | சு | ஆ | த |
| நு | ளு | ஐ | ரு | நு | ன | ே | ஏ | ழு | டு | ஊ | சு | சு | ளு |
| ஊ | லு | நு | யு | னு | டு | ஆ | ளு | ளு | ஐ | ழு | நு | சு | ளு |
| ழு | ஏ | சு | ே | வு | யு | நு | ளு | னு | ஐ | ஐ | டு | ளு | ே |
| ளு | ஐ | ளு | ஐ | ே | ம | தி | ப் | பு | நு | டு | ழு | ழு | நு |

*விலைமதிப்பற்றது*

*நிதியமைச்சர்*

*அரிதான*

*மதிப்பில்லாத*

*மதிப்பு*

*அதிகப்படியான*

*தங்கம்*

# கோரிக்கு கடன் சொல்லிக் கொடுத்த பாடம்



முன்னொரு காலத்தில் கோரி என்ற ஒரு பெண் இருந்தாள். அவளுடைய பெயரைப் போலவே அவள் மிகவும் அழகான பெண்ணாகவும், அவளுடைய தோல் பனியைப் போல் வெண்மையாகவும் இருந்தது. அவள் தன்னுடைய வளர்ப்புத் தாய் மற்றும் சகோதரிகளுடன் வசித்து வந்தாள். அவர்கள் அவளைக் கொடுமைப்படுத்தினார்கள். அவளை எல்லா வேலைகளையும் செய்யச் சொல்லிவிட்டு அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் அவளுடைய அழகைக் கண்டு மிகவும் பொறாமைப்பட்டு அவளை மிகவும் மோசமாக நடத்தினார்கள்.

அவளுடைய குடும்பத்தினர் அவளைத் தனிமைப்படுத்தினார்கள், அவளுடன் நட்பாகப் பழகி, அவள் குடும்பத்தினர் அவளுக்குத் தராத அன்பை அவளிடம் காட்டி, வாழ்நாள் முழுவதும் உதவி செய்த வயதான பெண்மணி மட்டும் இல்லையென்றால் அவள் முற்றிலும் தனியாகவே இருந்திருப்பாள். அந்தப் பெண்மணியே அவள் மீது உண்மையான அன்பு செலுத்திய சொந்தம்.



ஒரு நாள் கோரியின் வீட்டில் ஒரு அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது. அதில் கன்னிப்பெண்கள் அனைவரும் கோட்டைக்கு வரவேண்டும் என்றும், அங்கே இளவரசரும் வரப்போகிறார் என்றும் கூறப்பட்டிருந்தது. அனைவரும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. அவர்கள் அனைவருக்குள்ளும் அழகாக இருக்கும் அதிர்ஷ்டசாலிப் பெண் ஒருவர் இளவரசரின் மனைவியாகப் போகிறார். கோரியின் வளர்ப்புத் தாய் தன் மகள்கள் கலந்துகொள்வது ஒரு நல்ல சந்தர்ப்பம் என நினைத்தார், ஆனால் கோரியும் கலந்துகொள்ளப் போவது குறித்துக் கவலையடைந்தாள்.

*எனவே, கோரிக்குப் புதிய துணிகளைத் தரவில்லை. அவளுக்குப் பழைய அங்கிகளையே கொடுத்தாள், அவள் ஆடையணிந்திருந்த விதமும் மோசமாக இருந்தது. அவள் தன் வளர்ப்புத் தாயிடம் சென்று, நல்ல உடைகள் வேண்டும் என்று கேட்டாலும் கிடைக்காது, அவளே ஒன்று வாங்கிக்கொள்ளவும் அவளிடம் பணம் இல்லை. தான் மிகவும் அழகாகவே இருப்பதாகவும், ஆனால் சரியான உடைகள் அணியவில்லை என்றும் அவள் நினைத்தாள்.*



*தன்னிடம் நட்பாக இருக்கும் வயதான பெண்ணிடம் உதவி கேட்கலாம் என்று முடிவு செய்து, தான் இதை மறக்கமாட்டேன் என்றும், இளவரசியாகத் தேர்தெடுக்கப்பட்டால் அந்த வயதான பெண்ணுக்கு உதவி செய்வதாகவும் கூறினாள். அந்த வயதான பெண்மணி, தன்னுடைய சேமிப்பிலிருந்து கோரிக்குப் பணம் கொடுத்து, அழகான உடை வாங்க உதவி செய்தார். அடுத்த நாள் அவர்கள் கோட்டைக்குச் சென்றார்கள், அப்போது அவர் இளவரசியைப் போல உடை அணிந்திருந்தாள்.*



"கோட்டைக்கு வந்துவிட்டோம்!" என்று வளர்ப்புத் தாய் சந்தோஷமாகக் கூச்சலிட்டார். அவள் வெளியே பார்த்த போது, ஆச்சரியத்தில் அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. அந்தக் கோட்டையின் அழகைப் பார்த்து மூச்சுவிடவே மறந்துவிட்டார். அந்தக் கோட்டை பிரம்மாண்டமாகவும், மிகவும் நேர்த்தியாகவும் இருந்தது. அங்கே 5 கோபுரங்கள் இருந்தன, அங்கிருந்து பார்த்தால் முழு நகரமும் தெரிந்தது. அந்த கோபுரங்களை இணைக்கும் விதமாக பிரம்மாண்டமான சாம்பல் நிறச்சுவர்கள் இருந்தன. அந்தச் சுவர்கள் பளிங்குக் கற்களால் எழுப்பப்பட்டிருந்தன, நுழைவாயில் சுமார் 5 மீட்டர் உயரமான வலிமையான வளைவாக இருந்தது. நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வீரர்கள் நின்றார்கள், அவர்கள் அணிந்திருந்த கவச உடை வெள்ளி நிறத்தில் பளபளவென மின்னியது, அதில் நம் உருவம் பளிச்செனப் பிரதிபலித்தது.





*கிறீக்*!!
என்ற சத்தத்துடன்
கதவு திறந்தது,
அவர்கள் கோட்டைக்குள்
நுழைந்தனர். சுமார் 50
மீட்டர் நீளமுடைய அந்த
அறையின் இருபுறங்களிலும்
நாற்காலிகள்
போடப்பட்டிருந்தன. அவற்றின்
முன் 24 காரட் தங்கத்தில்
செய்யப்பட்டு, அனைத்து
வகையான முத்துகளும்,
பவளங்களும் பதிக்கப்பட்ட
அரியணை இருந்தது.

“நமது இளவரசருக்கு வருங்கால மனைவியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இன்று நீங்கள் அனைவரும் இங்கே கூடியிருக்கிறீர்கள், உங்கள் திறன்களை யார் மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகிறீர்களோ, அவர்களே இளவரசியாக, வருங்கால ராணியாகத் தேர்வு செய்யப்படுவீர்கள்” என்று அரசர் கூறினார். அந்த நாள் முழுவதும் நூற்றுக்கணக்கான பெண்கள் வந்து இளவரசரைச் சந்தித்துக்கொண்டே இருந்தார்கள். அடுத்ததாக கோரியின் முறை வந்தது. “வணக்கம் அரசே, என் பெயர் கோரி” என்று கூறி அரசரை வணங்கினாள். அதைக் கண்ட இளவரசரின் கண்கள் விரிந்து, இமை மூட மறந்தார்.

அவளின் அழகைக் கண்டு
பிரம்மித்த இளவரசர், இவரே
எனக்கு மனைவி என்று
முடிவெடுத்தார். வளர்ப்புத்
தாய்க்கோ இளவரசியாகும்
வாய்ப்பு தன் மகள்களுக்குக்
கிடைக்கவில்லை என்று
ஒரே ஆத்திரம், இருந்தாலும்
அதை வெளிக்காட்டவில்லை.
கடைசியில் கோரி
ராணியாகிவிட்டாள்!



உண்மையிலேயே அந்த நகரத்தை ஆட்சி செய்யும் ராணியானாள். அரசிக்குக் கிடைக்கும் மதிப்பு, மரியாதை, உயர்ந்த குடியைச் சேர்ந்த மக்களுடன் பழக்கம் ஆகியவற்றை நினைத்து மிகுந்த மகிழ்ச்சிடைந்த அவளிடம் கொஞ்சம் கொஞ்சமாக கர்வம் அதிகமானது. அடுத்த நாள் அவர் கோட்டைக்குச் சென்றுவிட்டாள்.



அவள் அங்கே சென்று சில நாட்களுக்குப் பிறகு அவளைச் சந்தித்து வாழ்த்துக் கூறுவதற்காக அந்த வயதான பெண்மணி வந்தார், ஆனால் அவரைச் சந்திக்காமல் திருப்பியனுப்பினார். ராணியானவுடன் கர்வக்காரியாகி, இனிமேல் அந்த வயதான பெண்ணுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்தார். அந்த வயதான பெண்ணைச் சந்திக்க மறுத்ததுடன், அவருக்கு உதவி செய்யவோ, அவர் செய்த உதவியைத் திருப்பித் தரவோ நினைக்கவில்லை. பல வாரங்களாகத் தொடர்ந்து அந்தப் பெண்மணி வந்த போதும் அவரைச் சந்திக்காமல் திருப்பியனுப்பிக் கொண்டேயிருந்தாள். கடைசியாக, இனிமேலும் தான் செய்த உதவியைத் திருப்பித் தரமாட்டாள் என்பதைத் தெரிந்துகொண்ட அந்த வயதான பெண், அவளை அரசன் கைவிடட்டும் என்று சாபமிட முடிவெடுத்தார். அடுத்த நாளே அது நடந்துவிட்டது. அரசன் கோரி வேண்டாம் என்று கூறிவிட்டார், கோரி மீண்டும் ஏழையாகிவிட்டாள், அவள் போவதற்கு ஒரு இடமும் இல்லை.



***நீதி*** *- இந்தக் கதையிலிருந்து நாம் அறிவது, நீங்கள் கடன் (ஒருவரிடமிருந்து பணம் வாங்குவது) வாங்கினால், அதைத் திருப்பித்தர வேண்டும், இல்லையென்றால் விளைவுகள் தீவிரமாக இருக்கும். எனவே நல்ல நோக்கங்களுக்காக மட்டுமே கடன் வாங்க வேண்டும், அதைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும்.*



## கடன்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யு | ஆ | மு | ஐ | டு | டீ | மு | ஐ | பு | ஊ | ய | ஐ | ே | ர் |
| னு | சு | த | வ | ணை | த் | தொ | கை | டு | ஆ | நு | ே | வு | ழு |
| ஞ | ன | ழு | ஐ | லு | வு | சு | நு | று | ஞ | ம | ழு | ஊ | ஊ |
| பு | மு | டு | யு | ளு | னு | கு | பு | ர் | து | மு | டு | யு | ஏ |
| ரு | ஆ | ே | டீ | ஏ | ஊ | ஓ | ணு | ஞ | று | லு | டு | யு | ஆ |
| தி | ரு | ப் | பி | க் | கொ | டு | னு | கு | பு | ர் | து | டீ | ே |
| து | ணு | ஓ | ஊ | ஏ | டீ | ே | க | பு | ஏ | ரு | ழு | ஐ | ளு |
| பு | ஆ | யு | ளு | னு | கு | பு | ட | யு | சு | டீ | ரு | ச | னு |
| வு | ர் | து | மு | டு | ஞ | று | ன் | ஊ | டி | யு | ஊ | கு | பு |
| மு | நு | சு | வு | லு | ரு | ஐ | பெ | ளு | ஏ | ஆ | ஏ | த | து |
| கு | ழு | ய | யு | ளு | னு | கு | று | லு | ஓ | ஊ | ஏ | னு | ர் |
| னு | பு | ர் | வு | து | மு | டு | க | நு | ணு | டு | வ | பு | பு |
| ளு | ஓ | ஐ | ணு | சு | று | று | ஏ | சு | று | லு | சு | ழு | டு |
| து | மு | ஐ | ஐ | ந | வ | ட் | டி | நு | ளு | வு | பு | நு | ரு |

தவணைத் தொகை  கடன் பெறுக  திருப்பிக் கொடு  வட்டி

# மோகனின் முக்கியமான கண்டுபிடிப்பு



மோகனும், கோபாலும் அவர்களின் குக்கீஸை அலமாரியில் ஒளித்து வைத்தனர். ஒளித்து வைக்க அந்த இடமே மிகப் பொருத்தமான இடமென்று அவர்கள் நினைத்தார்கள், ஏனென்றால் ராம், சோஹன் அல்லது மீனு ஆகிய ஒருவரும் அங்கே சென்று பார்க்கமாட்டார்கள். அதனால் அந்த இடத்தில் குக்கீஸ் மிகவும் பாதுகாப்பாக இருக்கும். அந்த இடத்தில் வைத்தால் எதுவுமே ஆகாது என்று அவர்கள் நினைத்தார்கள்.

*கிளப்ஹவுஸ் அருகில் சுற்றிக்கொண்டிருந்த மோகனுக்கு மிகவும் மெல்லிய சத்தம் ஒன்று கேட்டது. பெரிதாக ஒன்றும் இருக்காது என்று அதைக் கண்டுகொள்ளவில்லை. அன்று மாலை குக்கீஸை எடுக்கலாம் என்று அவன் அலமாரிக்குச் சென்று பார்த்தான்.*


*“இன்று நாள் முழுவதும் நிறைய வேலை, போய் குக்கீஸ் சாப்பிட வேண்டும்! என்ன?*
*குக்கீஸ் எங்கே போனது?”*
*மோகனுக்கு ஒரே கவலை.*
*அந்தக் குக்கீஸ் எல்லாம் என்ன ஆனது? எப்படிக் காணாமல் போயிருக்கும்?*



*“ஆ! என் குக்கீஸ் எல்லாம் இப்படியாகிவிட்டதே!”*
*என்று சோகமாகக் கூறினான். அவை எல்லாம் அலமாரியின் அடியில் நொறுங்கிக் கிடந்தது, இனிமேல் அவற்றைச் சாப்பிட முடியாது. “ஓ! நான் இதை கோபாலிடமும் சொல்ல வேண்டும், கண்டிப்பாக அவனும் மிகவும் வருத்தப்படுவான்!” அவன் கோபாலிடம் வேகமாகச் சென்று “நம் குக்கீஸ் எல்லாம் வீணாகிவிட்டது! அலமாரிக்கு அடியில் நொறுங்கிக் கிடக்கிறது கோபால்!” என்று கூறினான்.*



*அதைக் கேட்டு கோபால் கொஞ்சமாவது அதிர்ச்சிடைவான் என்று நினைத்தான், ஆனால் கோபாலின் முகத்தில் சிறிதும் சலனம் இல்லை. “உன் குக்கீஸ் எல்லாம் நொறுங்கிவிட்டதா... என் குக்கீஸ் நன்றாக இருக்கிறது!”*
*அட! இது எப்படி நடக்கும்? எப்படி கோபாலின் குக்கீஸ் மட்டும் நன்றாக இருக்கும்? “என் பின்னால் வா”*
*என்று கோபால் கூற, மோகனும் பின்னாடியே சென்றான்.*



*“திரைக்குப் பின்னால் என்ன இருக்கிறது? குக்கீஸா! எப்படி வந்தது?” “என் குக்கீஸ் அனைத்தையும் நான் ஒரே இடத்தில் வைக்கவில்லை, அவற்றை நான் வீட்டைச் சுற்றிலும் 10 வெவ்வேறு இடங்களில் வைத்திருந்தேன், அதனால் உன் குக்கீஸ் எல்லாம் நொறுங்கிய போதும், என்னுடையது 10% மட்டுமே சேதமானது” என்று கோபால் பெருமையாகக் கூறினான். “நீ என்ன சொல்கிறாய்? எனக்குப் புரியவில்லை” என்று மோகன் குழப்பமாகச் சொன்னான். “நான் என் பொருட்களை வெவ்வேறு இடங்களில் வைத்தேன், எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைக்கவில்லை”, என்று கோபால் விளக்கமாகக் கூறினான்.*

*அதன் பிறகே, மோகன் தான் செய்த மிகப்பெரிய தவறை உணர்ந்தான். அத்தகைய ஒரு முக்கியமான விஷயத்தை அறிந்துகொள்ள உதவியதற்காக அவன் கோபாலுக்கு நன்றி சொன்னான். அவனது குக்கீஸை ராம், சோஹன் அல்லது மீனு ஆகியோர் மட்டும் திருடமாட்டார்கள், மற்ற காரணங்களாலும் அவை சேதமடையலாம். “இப்பொழுது பொருட்களை வைப்பதற்கு நான் மேலும் அதிக இடங்களைக் கண்டறியப் போகிறேன். சீக்கிரம் அதைச் செய்தாக வேண்டும். நான் கிளம்புகிறேன் கோபால்!” என்று சொல்லிவிட்டு மோகன் ஓடிவிட்டான்.*

*இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்னவென்றால், ஒருபோதும் உங்கள் முதலீடுகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைக்கக்கூடாது. ஒரே இடத்தில் உங்கள் முதலீடுகளை செய்யாமல், வெவ்வேறு இடங்களில் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் உங்கள் முதலீடுகளில் ஒன்றின் மதிப்பு குறைந்தாலும் பிற முதலீடுகளின் மதிப்பு குறையாமல் இருப்பதால் உங்களுக்கு நஷ்டம் ஏற்படாது. இவ்வாறு செய்யும் போது நீங்கள் பல்வேறு பிரிவுகளில் முதலீடு செய்வதால், ஏதாவது ஒரு முதலீடு சிறப்பாகச் செயல்பட்டாலும் அதிலிருந்து மிக அதிக லாபம் கிடைத்தால் உங்கள் முதலீடுகளுக்கு மிகச்சிறந்த வளர்ச்சி கிடைக்கும். அதுமட்டுமன்றி உங்களுடைய முதலீடு குறைவாக இருப்பதால் உங்களுக்குக் கிடைக்கும் லாபம் குறைவாக இருப்பினும், உங்களுடைய முதலீட்டுக்கான ஆபத்து மிகவும் குறைவாகவே இருப்பதால் நீங்கள் எப்பொழுதும் லாபத்தையே பெறுவீர்கள்.*

**<u>பொருத்துக</u>**

| | |
|---|---|
| *1. மோகன் தனது குக்கீஸை இழந்தது எதனால்* | *அவன் பல ஸ்டாக்குகளில் முதலீடு செய்தான்* |
| *2. கோபால் ஏன் தனது குக்கீஸை இழக்கவில்லை* | *அதிக லாபத்துக்கான வாய்ப்பு* |
| *3. பல இடங்களில் முதலீடு செய்வதன் பலன் 1 கூறுக* | *ஒரே இடத்தில் செய்யும் முதலீட்டால் ஏற்படும் நஷ்டம்* |
| *4. பல இடங்களில் முதலீடு செய்வதன் மற்றொரு நன்மை என்ன* | *ஆபத்து குறைவாக இருப்பது* |
| *5. மோகனின் குக்கீஸ் எல்லாம் சேதமடைந்தது எதைக் காட்டுகிறது* | *பிரித்து முதலீடு செய்யாமை* |

# விடைக் குறிப்பு

## 1. ஹரிஷ் மற்றும் கீதா நிதித் திட்டமிடலைக் கற்கிறார்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1 ல் | | | | | |
| 2 அ | ட் | ட | வ | ணை | 4 சே | | |
| | | 3 மி | ச் | ச | மி | ல் | லை |
| | | ட | | | ப் | | |
| | | ட் | | | பு | | |
| | | தி | | | | | |

## 2. முதலீட்டைக் கூட்டும் மாயாஜாலம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 ப | | | | | |
| | | | ல | | | | | |
| 2 லா | 3 ப | ம் | நி | | | | | |
| | ண் | | ற | | | | | |
| | ட | | ப் | | | | | |
| | மா | | 4 ப | ல | 5 ம | ட | ங் | கு |
| | ற் | | ழ | | று | | | |
| | று | | ங் | | மு | | | |
| | | | க | | த | | | |
| | | | ள் | | லீ | | | |
| | | | | | டு | | | |

## 3. போலு வங்கிக்குச் செல்கிறார்

**முதலீட்டுத் தொகை** - *முதலில் கடன் வாங்கும் அல்லது முதலீடு செய்யும் தொகை*

**மறுமுதலீடு** - *லாபத்தை மீண்டும் முதலீடு செய்வது*

**முதலீடு** - *ஏதாவது ஒன்றில் பணத்தைப் போடுவது*

**வைப்புத் தொகை** - *உங்கள் வங்கிக் கணக்கில் பணம் போடுவது*

**தவணைத் தொகை** - *வங்கியிலிருந்து கடன் வாங்கிய பிறகு ஒவ்வொரு மாதம் காலாண்டிலும் வங்கிக்குத் திரும்பச்செலுத்த வேண்டிய தொகை*

**வட்டி** - *வங்கியில் ஒரு குறிப்பிட்ட காலம் இருக்கும் வைப்புத் தொகைக்குக் கிடைக்கும் லாபம்*

## 4. விக்ரம் சிங் ராஜாவும், மதிப்பில்லாத அவரது பணமும்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன | ச | வி | லை | ம | தி | ப் | ப | ற் | ற | து | ன | ள | ய |
| ழு | சு | ஊ | ளு | ளு | சு | நு | ஊ | டு | நு | ளு | ஐ | னு | ே |
| கு | ழு | நு | நி | தி | ய | மை | ச் | ச | ர் | வு | நு | சு | கு |
| ஏ | ஊ | லு | ளு | ஊ | சு | ஐ | யு | து | வு | ழு | லு | ளு | ம |
| அ | தி | க | ப் | ப | டி | யா | ன | ச | ளு | யு | ழு | சு | தி |
| டு | சு | சு | ழு | ஆ | ளு | ரு | வு | சு | த | ளு | டு | யு | ப் |
| நு | நு | ஐ | ளு | சு | நு | யு | நு | வு | ங் | சு | பு | ர் | பி |
| ஐ | ளு | ஐ | ஊ | ழு | அ | யு | ஐ | கு | க | ரு | கு | நு | ல் |
| ே | வு | டு | ழு | ழு | ரி | ஐ | சு | டு | ம் | ளு | ே | நு | லா |
| ளு | ஏ | யு | டு | நு | தா | ளு | யு | நு | ஐ | ஐ | சு | ஆ | த |
| நு | ளு | ஐ | ரு | நு | ன | ே | ஏ | ழு | டு | ஊ | சு | சு | ளு |
| ஊ | லு | நு | யு | னு | டு | ஆ | ளு | ளு | ஐ | ழு | நு | சு | ளு |
| ழு | ஏ | சு | ே | வு | யு | நு | ளு | னு | ஐ | ஐ | டு | ளு | ே |
| ளு | ஐ | ளு | ஐ | ே | ம | தி | ப் | பு | நு | டு | ழு | ழு | நு |

## 5. கோரிக்கு கடன் சொல்லிக் கொடுத்த பாடம்

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யு | ஆ | மு | ஐ | டு | டீ | மு | ஐ | பு | ஊ | ய | ஐ | ே | ர் |
| னு | சு | த | வ | ணை | த் | தொ | கை | டு | ஆ | நு | ே | வு | ழு |
| ஞ | ன | ழு | ஐ | லு | வு | சு | நு | று | ஞ | ம | ழு | ஊ | ஊ |
| பு | மு | டு | யு | ளு | னு | கு | பு | ர் | து | மு | டு | யு | ஏ |
| ரு | ஆ | ே | டீ | ஏ | ஊ | ஓ | ணு | ஞ | று | லு | டு | யு | ஆ |
| தி | ரு | ப் | பி | க் | கொ | டு | னு | கு | பு | ர் | து | டீ | ே |
| து | ணு | ஓ | ஊ | ஏ | டீ | ே | க | பு | ஏ | ரு | ழு | ஐ | ளு |
| பு | ஆ | யு | ளு | னு | கு | பு | ட | யு | சு | டீ | ரு | ச | னு |
| வு | ர் | து | மு | டு | ஞ | று | ன் | ஊ | டி | யு | ஊ | கு | பு |
| மு | நு | சு | வு | லு | ரு | ஐ | பெ | ளு | ஏ | ஆ | ஏ | த | து |
| கு | ழு | ய | யு | ளு | னு | கு | று | லு | ஓ | ஊ | ஏ | னு | ர் |
| னு | பு | ர் | வு | து | மு | டு | க | நு | ணு | டு | வ | பு | பு |
| ளு | ஓ | ஐ | ணு | சு | று | று | ஏ | சு | று | லு | சு | ழு | டு |
| து | மு | ஐ | ஐ | ந | வ | ட் | டி | நு | ளு | வு | பு | நு | ரு |

## 6. மோகன் கண்டுபிடித்த முக்கிய விஷயம்

1. *ஒரே இடத்தில் செய்யும் முதலீட்டின் அபாயம்*
2. *அவன் பல இடங்களில் முதலீடு செய்தான்*
3. *அதிக லாபத்துக்கான வாய்ப்பு/அபாயம் குறைவு*
4. *அதிக லாபத்துக்கான வாய்ப்பு/அபாயம் குறைவு*
5. *பிரித்து முதலீடு செய்யாமை*

# ஏக் ப்ரயாஸ்


*எல்லோரும் சொல்வதைப் போல் பணத்தைச் ‘சம்பாதிப்பது கஷ்டம், இழப்பது எளிது’. குறிப்பாக, இந்தியாவின் கிராமப்புற மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கிறார்கள், ஆனால் அவர்கள் மோசடித் திட்டங்கள், லாட்டரி போன்றவற்றில் எளிதாகப் பணத்தை இழந்துவிடுகிறார்கள் அல்லது பரிசுப் பொருட்கள் போன்றவற்றால் தூண்டப்பட்டு ஏமாந்துவிடுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் எந்த முதலீட்டையும் பயத்துடனே பார்க்கிறார்கள். இதன் விளைவாக, பணம் சம்பாதிக்கிறார்கள், செலவு செய்கிறார்கள், ஆனால் பணம் வளர்ச்சியடைவது என்பது இல்லாமல் போய்விடுகிறது.*

*ஷௌர்யா கப்ராவின் ஏக் ப்ரயாஸ் என்னும் இந்த முன்முயற்சி, பொருளாதார அறிவுடைய கிராமப்புற இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சியாகும். இது, நிதித் திட்டமிடல், முதலீடு, சேமிப்பு, கடன்கள், வைப்புத் தொகை மற்றும் பிற கருத்துகளை புத்தகங்கள் மற்றும் அனிமேஷன் போன்றவற்றின் மூலம் எளிதாகப் புரிந்துகொள்ளும் விதத்தில் விளக்கித் தெளிவுபடுத்துகிறது. பொருளாதார இழப்புகளைச் சமாளித்து, அவசரகாலச் செலவுகளைச் சமாளிப்பது எப்படி என்பதைக் கற்றுத் தருவதுடன் அந்த நெருக்கடிகளால் பாதிக்கப்படாமல் இருப்பது எப்படி என்பதையும் இது கற்றுத் தருகிறது.*

***ஏக் ப்ரயாஸ் -*** *இந்திய கிராமப்புறவாசி ஒவ்வொருவரும் பணத்தைப் பற்றிய அறிவைப் பெற்று, சிறப்பான எதிர்காலத்துக்கு அதைச் சேமிப்பதற்கும், பணத்தைப் பெருக்க உதவி செய்வதற்குமான ஒரு முயற்சியாகும்.*

“சேமிக்கும் ஒவ்வொரு ரூபாயும், சம்பாதித்த ஒரு ரூபாய்க்குச் சமம்”

விற்பனைக்கு அன்று



ஆசிரியர்: ஷௌர்யா கப்ரா

www.ekprayaas.co.in